*கவனிக்க.- 23.02.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2009 - 2017 මාර්තු මස 03 වැනි සිකුරාදා - 2017.03.03**

*2009 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 560 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சாந்த அபேசேகர அபிவிருத்தி, சமூக சேவைகள் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, மார்ச்சு மாதம் 24ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மார்ச்சு மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

559- B81149 - 5,403 (2017/03)

# மாகாண சபை அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படவேண்டிய 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட மாகாண சபை அறிவித்தல்கள் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) உப பிரிவின் கீழ் விசேட கட்டளையின் படி செய்யப்படுகின்ற அதிகாரத்தினை கையளித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் கீழான கட்டளை.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் தெரு போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடு கட்டமைப்பு, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆர். பி.டீ. குணதாச தெஹிகம ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் II ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1972 ஆம் ஆண்டின் 5 இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு விதிக்கப்பட்டுள்ள உரிய அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள எல்லா அதிகாரமும் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.*

ஆர். பி. டீ. குணதாச தெஹிகம,

வடமேல் மாகாணத்தின் மாகாண தெருப் போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தக, வீடமைப்பு, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி நடவடிக்கை பற்றிய அமைச்சர்.

குருநாகல்,
2017, சனவரி 19.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* |
|---|---|---|
| ஹேமசந்திர பதிரனலாகே குணபால அஜித் குமார | 2017.01.02 | கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, 44 (44(6) தவிர)] 45,46,48,49,50,52,53,54,58 (58(3) மற்றும் 58(5) தவிர] 59,68 மற்றும் 72 ஆகிய பந்திகளிள் கீழ் ஆணையாளரும் பதிவாளரினால் எல்லாஅதிகாரவிதிகளின் 4, 11, 15, 16(II), 18, 19, 27, 32, 33, 35, 37, 39, 40, 41.42, 43, 48, 49 (49(XII)தவிர) 51,52 மற்றும் 53 கான விதிகளின் கீழ் ஆணையாளர் மற்றும் பதிவாளரின் எல்லா அதிகாரமும் |

3 - 178

## வடமேல் மாகாண அரச சேவையின் குருநாகல் மாநகர சபையின் சட்ட அதிகாரி பதவிக்கான (திறந்த) ஆட்சேர்ப்பு - 2017

1. வடமேல் மாகாண அரச சேவையின் குருநாகல் மாநகர சபையின் நிறைவேற்று தர சட்ட அதிகாரி III ஆம் தரத்தின் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்ட (ஆண்/ பெண்) இலங்கைப் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. சம்பளம்.- 2016.02.25 ஆம் திகதிய இலக்கம் 03/ 2016 கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணையின்படி இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் SL 1-2016
ரூ. 47,615 - 10 x 1335 - 8 x 1630 - 17 x 2170 - ரூபா 11,0895 ஆகும்.

எனினும், 2020.01.01 ஆம் திகதி வரை சம்பளம் வழங்கப்படுவது குறித்த சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதன் II ஆவது அட்டவணையின் படியாகும். (அது 2017.01.01 ஆம் திகதி அடிப்படைச் சம்பளம் ரூ. 32,807/- + ஒப்பீட்டுக் கொடுப்பனவு 4715/- என ஆகும்)

3. (அ) **கல்வி /தொழில் தகைமைகள் :-**
பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டம் ஒன்றைப் பெற்று உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியான சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் அல்லது சட்டக் கல்லூரியின் கடைசி வருடப் பரீட்சையில் சித்தி பெற்று உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

(ஆ) **அனுபவம்**
இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரனி ஒருவராக 3 வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (இதை குறைந்த பட்சம் 15 வருடங்கள் உயர் நீதிமன்ற அனுபவம் கொண்ட சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்)

(இ) **ஏனைய தகைமைகள்**
(i) அண்மிய ஐந்து வருடங்களில் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல்
(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த பண்புகளையுடையவராகவும், சிறந்த தேகாரேக்கியத்தை உடையவராகவும் இருத்தல்.
(iii) ஆட்சேர்ப்புக்கான சகல தகைமைகளும் 2017.04.03 ஆம் திகதிக்கு நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.
(iv) 2017.04.03 ஆம் திகதிக்கு 25 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள்**
(i) பதவி நிரந்தரமானதாகும். உங்களுக்கு உரித்தான ஒய்வூதிய முறை தொடர்பில் எதிர்காலத்தில் அரசு மேற்கொள்ளும் தீர்மானங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.
(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 3 வருட தகுதி காண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும். அவர் குறித்த காலத்தினுள் வேலை மற்றும் நடத்தை தொடர்பில் திருப்திகரமாக செயலாற்றியிருப்பின் முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் தோற்றி சித்தி பெற்றிருப்பின் மற்றும் ஏனைய நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தகுதிகாண் காலத்தின் முடிவில் நிரந்தரமாக்கப்படுவர்.
(iii) பொது நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 5 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.
(iv) இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதி கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள் மற்றும் அரசு மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை :-**
*அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்காக வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன், இங்கு காட்டப்படும் புள்ளி வழங்கும் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.*

6. **எழுத்துப் பரீட்சை** : - தொடர்புடையதல்ல.

7. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை** :- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தகைமைகள் பரீட்சிக்கப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல தகைமைகளையும் பூர்த்தி செய்து விண்ணப்பங்களை முன் வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமாகும்.

| *புள்ளி வழங்கும் பகுதிகள்* | *அதி உச்ச புள்ளிகள்* |
|---|---|
| **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>• ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்<br>முதலாம் வருப்பு - 20 புள்ளிகள்<br>இரண்டாம் வகுப்பு - 20 புள்ளிகள்<br>மூன்றாம் வகுப்பு - 10 புள்ளிகள்<br>சட்டக் கல்லூாரி இறுதிப் பரீட்சையில் முதலாம் வகுப்பு சித்தி 15 புள்ளிகள்<br>சட்டக் கல்லூாரி இறுதிப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பு சித்தி 15 புள்ளிகள் 10 புள்ளிகள் என புள்ளிகள் வழங்கப்பட வேண்டும். (உச்ச தகைமைக்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும் - பட்டம் அல்லது சட்டக் கல்லூாரி தகைமை ஆகிய இரண்டில் ஒன்றுக்கு மட்டும்) | 20 |
| **மேலதிக கல்வித் தகைமைகள்**<br>• ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட குறித்த துறை தொடர்பான ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட பட்டப் பின் டிப்ளோமா அல்லது பட்டப் பின் சட்ட டிப்ளோமா பாட நெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம்)<br>• ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் உரிய துறை சார்ந்த 06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்)<br>• ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்படுகின்ற உரிய துறை தொடர்பான 3 மாதங்கள்/ 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறிக்காக (ஒரு டிப்ளோமா வுக்கு 2 புள்ளிகள் வீதம்) | 15 |
| **மேலதிக அனுபவம்**<br>சட்டத்தரணி ஒருவராக அரச துறையில் அல்லது தனியார் துறையில் அனுபவம்<br>- ஒரு வருடத்திற்குக் குறைவான, 06 மாதத்திற்கு மேற்பட்ட 02 புள்ளிகள்<br>- ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் அதிக பட்சம் 30 (அடிப்படைத் தகைமையைப் பூர்த்தி செய் வதற்கு அவசியமான சட்டத்தரணியாகக் கடமையாற்றிய 03 வருட சேவைக் காலத்தைத் தவிர்த்து)<br>- (20 வருடங்களைப் பூரணப்படுத்திய சட்டத்தரணி அல்லது நீதவான் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட) சான்று மூலம் அனுபவத்தை உறுதி செய்ய வேண்டும்) | 30 |
| **கணினி அறிவு**<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டம் ஒன்றிற்காக தகவல் தொழில் நுட்பத்தினை பிரதான பாடம் ஒன்றாக கற்றிருத்தலுக்காக (15 புள்ளிகள்)<br>அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி அல்லது 1500 மணித்தியாலங்களுக்காக 10 புள்ளிகள்<br>அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப சான்றிதழ் | 15 |

| புள்ளி வழங்கும் பகுதிகள் | அதி உச்ச புள்ளிகள் |
|---|---|
| பாடநெறி ஒன்றுக்காக<br>- 6 மாதங்கள் / 720 மணித்தியாலங்கள் - 07 புள்ளிகள்<br>- 3 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் - 05 புள்ளிகள் | |
| **ஆங்கில மொழித் தேர்ச்சி**<br>ஆங்கில மொழியில் பயின்ற பட்டப் பின் பட்டம், பட்டம் அல்லது சட்டத்துறைப் பட்டம் - 15 புள்ளிகள்<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்கான (ஒரு வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) - 10 புள்ளிகள்<br>ஆங்கில மொழியில் பயின்ற பட்டப் பின் பட்டம், பட்டம் அல்லது சட்டத்துறைப் பட்டம் - 15 புள்ளிகள்<br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்கலைக் கழகம் ஒன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநொறிக்காக<br>- 6 மாதங்கள் / 720 மணித்தியாலங்கள் - 07 புள்ளிகள்<br>- 3 மாதங்கள் /360 மணித்தியாலங்கள் - 05 புள்ளிகள் | 15 |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் | 05 |
| மொத்தப் பள்ளிகள் | 100 |

**குறிப்பு** - I. சித்தி பெற 60% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் அபேட்சகர் வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளப்படுவார்.

*8. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :***

*8.1* இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவுள்ள தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் தாயரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் 2017.02.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் " செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் அணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " வடமேல் மாகாண அரச சேவையின் சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*8.2* தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரியாயின் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

*8.3* மாதிரி விண்ணப்பப் படிவத்தினை விட வித்தியாசமான, தாமதமாகக் கிடைக்கும், தெளிவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவத்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்துள்ளதா என்பதை உறுதி செய்து கொள்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். விண்ணப்பப்படிவத்தை முறையாக பூரணப்படுத்தாமையினால் ஏற்படும் நடடங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளியாவார். விண்ணப்பப்படிவத்தின் நிழற் படப்பிரதி ஒன்றை தம் வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

*09.* இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் 28.02.2017 ஆந் திகதின்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

*10.* ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என்பது பதவி வழங்குவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிய வந்தால் அவரது விண்ணப்ப தகைமை இரத்துச் செய்யப்படும். பதவி கிடைத்த பின்னரோ தெரிந்து கொண்டு பொய்யான

தகவல்களை வழங்கியோ அல்லது உண்மைத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டோ இருந்தால் தொழிலில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. விண்ணப்பம் கோரல் அறிவித்தலுடன் தொடர்பான விடயங்கள் அல்லது இந்த அறிவித்திலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

12. வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள்
ஆணைக்குழு

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு (வடமேல்),
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2017, பெப்புருவரி 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண சபை அரச சேவையின் குருநாகல் மாநகர சபையில்**
**சட்ட அதிகாரி பதவிக்கான (திறந்த) ஆட்சேர்ப்பு - 2017**

பரீட்சை எண் : -
(அலுவலக உபயோகத்திற்காக)

1. 1.1 முதலெழுததுக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) : ..........................................
   1.2 முதலெழுததுக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................
   1.3 முழுப் பெயர் (சிங்களம் /தமிழில்) : ..........................................
   1.4 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ..........................................
   1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி : ..........................................
   2.2 தொலைபேசி இலக்கம்: தனிப்பட்ட: .................................... அலுவலக :....................................
3. பால் (உரிய பெட்டியினுள் √ அடையாளத்தை இடவும்)
   பெண் : ☐ ஆண் : ☐
4. பிறந்த திகதி : ஆண்டு : .......................... மாதம் : .......................... திகதி : ..........................
5. விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதியன்று வயது: ..........................................
   வருடம் : .......................... மாதம் : .......................... நாள் : ..........................
6. 2017.04.03 ஆம் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம்
   வருடங்கள் : .......................... மாதங்கள் : .......................... நாட்கள் : ..........................
7. கல்வித் தகைமைகள் /தொழிற் தகைமைகள் :
   ..........................................
   ..........................................
8. அனுபவம் : ..........................................
9. மேலதிக கல்வித் தகைமைகள் : ..........................................
10. மேலதிக தொழிற் தகைமைகள் : ..........................................
11. மேலதிக அனுபவம் : ..........................................
12. கணினி அறிவு : ..........................................

13. ஆங்கில மொழிப் புலமை : ..........................................................................................

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை

............................................................................ ஆகிய என்னால் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவின் படியும், நம்பிக்கையின் படியும் உண்மையானதும், செம்மையானதும் என உறுதியளிக்கிறேன்.

திகதி : ............................................ ..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வன் /செல்வி .............................................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ................................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :- ............................................................
கையொப்பம் :- ............................................................
பதவி, உத்தியோகபூர்வ முத்திரை :- ............................................................

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 240, 360 க்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

அரச சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளின் திணைக்களத் தலைவரின் விதப்புரை
(தேவையற்றதை வெட்டி விடவும்)

திரு./ திருமதி/ செல்வன்/ செல்வி ........................................................................................................ அவர்கள் தற்போது ................................................................ அமைச்சில்/ திணைக்களத்தில் /நிறுவனத்தில் ...................................................... பதவியில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்பட்டவர் அல்ல என்றும், அனுதாப மாற்றுத் தெரிவின் அடிப்படையிலோ அல்லது செயற்றிறன் இன்மை காரணமாக ஓய்வில் அனுப்பப்பட்டவர்/ அனுப்பப்படாதவர் என்பதையும் பதவியை விட்டுச் சென்றவராக கருதப்படுபவர்/கருதப்படாதவர் என்பதையும் உறுதி செய்வதோடு, இந்தப் பரீட்சையின் பெறுபெற்றின் அடிப்படையில் அவர் தற்போது சேவையில் உள்ள பதவியில் இருந்து விடுவிப்பு வழங்க முடியும் /முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : .................................... ..................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோக பூர்வ முத்திரை).

03- 104

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.